11 DEC 1982

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

வியாழக்கிழமை, *1982* மார்ச் *18*.

பங்குனி 5, துன்மதி—திருவள்ளுவர் *2013*.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

''ஆகாறு அளவிட்டி தாயினுங் கேடில்லை

போகாறு அகலாக் கடை''

பொருள் வரும் வழி (வருவாய்) சிறிதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடாவிட்டால் அதனால் தீங்கு இல்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மின்சார வாரியத்தின் பழுதடைந்த வாகனங்களைப் பழுதுபார்த்தல்

*வினா எண். 531—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்சார வாரியத்தில் பழுதடைந்த வாகனங்களை தனியார் துறையில் பழுது பார்ப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில் மின்சார பணிமனையிலே பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மின்வாரியத்தின் ஊர்திகளின் பெரிய பழுதுகள் மட்டுமே தனியார் துறை பணிமனையில் பழுது பார்க்கப்படுகிறது.

(ஆ) மின்வாரிய ஊர்திகளின் பெரிய பழுதுகளைப் பழுது பார்க்கும் அளவுக்கு பணிமனை அமைக்கும் உத்தேசம் வாரியத்தில் தற்போது இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பணிமனைகளில் அந்த ரிப்பேர் பார்ப்பதை விட மின் வாரியத்திலேயே அந்த மாதிரி பணிமனைகளை ஏற்படுத்தினால் வாரியத்தின் செலவை மிச்சப்படுத்த முடியாதா? இது வரையில் ஏற்படுத்தவில்லையென்றால், இனிமேலாவது ஏற்படுத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் ஏற்கனவே 5 இடங்களில் பணிமனைகள் இருக்கின்றன. அவைகளின்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மூலமாக ஓரளவிற்கு பழுதுபார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மற்ற பல இடங்களிலும் பணிமனைகள் தொடங்கினால், பணியாளர்கள் நியமிப்பது, நிர்வகிப்பது என்பது சிக்கலானதாகவும், செலவுமிக்கதாகவும் இருக்கும் என்பதால், அதனை விரிவாக்கும் உத்தேசம் இல்லை. மாநில அரசின் எம். வி. எம். ஓ. ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிமனைகளை அங்கீகரித்து வைத்து இருக்கின்றனர். அந்த அங்கீகாரம் பெற்ற பணிமனைகள் மூலமாக மின்வாரிய ஊர்திகளும் கொடுக்கபட்டு பழுதுப்பார்க்கப்படுகின்றன.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் மூலமாகத்தான் மின்வாரிய ஊர்திகள் பழுதுபார்க்கப்படுகின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால், போக்குவரத்துத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட பணிமனைகள் எத்தனை உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 60 பணிமனைகள் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றின் மூலமாகத்தான் அந்தப் பழுது பார்க்கும் வேலைகள் செய்யப்படுகின்றன.

திரு. டி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரிய ஊர்திகளைப் பழுதுபார்க்கும் வேலைகளை மின்வாரியமே பார்த்துக்கொள்ளும் அளவிற்கு அதற்குத் தேவையான பழுது பார்க்கும் ஏற்பாடுகளை முறையாக செய்யாத காரணத்தால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கு பழுது அடைந்த வண்டிகள் பலவும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள மின் வாரிய ஊர்திகள் கடந்த ஓராண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் பழுது பார்க்க தக்க நடவடிக்கைகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தந்த தகவலின் அடிப்படையில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அங்கீகாரம் எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? வேண்டியவர் வேண்டாதவர் என்ற அடிப்படையிலா அல்லது குறைந்தபட்சத் தகுதி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விவரங்களை பின்னால் போக்குவரத்துத் துறை மூலமாகக் கேட்டுப் பெறலாம். வேண்டியவர், வேண்டாதவர்களுக்கு வழங்குவது என்கிற காலம் மலையேறிவிட்டது.